# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 57/மா/2022**

**நாள் : 18.07.2022**

திரு. பி.ஜே. பாபு,
கோயம்புத்தூர் - 641 012. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
வடக்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், காந்திபுரம், 4வது வீதி, எண்.146 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பி.ஜே. பாபு என்பவரின் 19.5.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.05.2022-ல் பெறப்பட்டு 57/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், காந்திபுரம், 4வது வீதி, எண்.146 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பி.ஜே. பாபு என்பவர் தனது முறையீட்டு மனுவில் :

"கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்தில் குத்தகை இனமான துடியலூர் இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தை 01.04.2017 முதல் 31.03.2020 வரை மூன்று ஆண்டுகளுக்கு பி.ஜே.பாபு ஆகிய எனக்கு குத்தகைக்கான உத்தரவு கொடுக்கப்பட்டது. அச்சமயம் Covid-19 காலம் என்பதால் அரசாங்கத்தால் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டிருந்தது. அதனால் நான் முன்கூட்டியே குத்தகை காலம் முடிவதற்கு முன்பே உரிமத்தை ஆணையர் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டேன்.

15.06.2020 அன்று நேரிலும் மற்றும் தபால் மூலமும் மூன்று ஆண்டுகளுக்கான வைப்புத் தொகை, மற்றும் காப்புத் தொகையான ரூ.1,54,922/- ஐ திருப்பி அளிக்கும்படி வேண்டிக் கேட்டுக்கொண்டேன். எந்த ஒரு பதிலும் சொல்லாமல் காலம் கடத்திக் கொண்டு எனக்கு மன உளைச்சலை ஏற்படுத்தினார்கள் மற்றும் 23.10.2020 அன்று

நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள். அதற்கு பணம் ஏற்பாடு செய்து காத்திருந்தேன். ஆனால், மாநகராட்சி எந்த முடிவும் எடுக்காமல் மிகுந்த மனஉளைச்சலை ஏற்படுத்தினார்கள், சுமார் ஒரு வருட காலம் கழித்து 08.07.2021 அன்று என்னிடம் எந்த விளக்கமும் கேட்காமல் ஏழு தினங்களுக்குள் பணம் செலுத்துமாறு என்னை கட்டாயப்படுத்துகிறார்கள்.

நிருவாகம் காலதாமதமாக உத்தரவு இடப்பட்டதால் நான் மிகவும் சிரமப்பட்டேன். எனவே, எனக்கு ஒரு மாதம் பணம் செலுத்த அவகாசம் அளிக்குமாறு வேண்டுகிறேன். இல்லையென்றால் எனது வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையையும் திருப்பி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது. அவர் தனது 10.6.2022 நாளிட்ட அறிக்கையில்:**

"கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட துடியலூர் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இருசக்கர வாகனம் நடத்தும் உரிமம் திரு. பி. ஜே. பாபு என்பவருக்கு ஒப்படைக்கப்பட்டு 01.04.2017 முதல் 31.03.2020 வரை நடத்தி வந்தார். மேலும் அவர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை ரூ.25,000/- மற்றும் காப்புத் தொகை ரூ.25,000/- ஆகியவை மாநகராட்சி கணக்கில் இருப்பில் உள்ளது.

மேலும் 2020-2021 ஆம் ஆண்டிற்காக இவ்வினத்திற்கான 23.10.2020-ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் திரு. பி. ஜே. பாபு என்பவர் முந்தைய ஆண்டு செலுத்திய ஏல வைப்புத் தொகையின் இரசீதின் நகல் இணைத்து பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் ஆண்டு குத்தகையாக ரூ.2,82,900/-க்கு நாள்:23.10.2020-ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்தார். இவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது சென்ற ஆண்டு கோரியுள்ள ஏலத்தொகையான ரூ.3,37,975/- விட ரூ.55,075/- குறைவாக இருந்ததால், மறு ஏலம் 29.12.2020-ல் நடத்தப்பட்டது. இதில் ஒருவரும் ஏலம் கோர முன்வரவில்லை. எனவே இவ்வினத்திற்கு ஏற்கனவே 23.10.2020-ம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் திரு. பி.ஜே.பாபு அவர்கள் அளித்த உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிக்கையான ரூ.2,82,900/-ஐ ஏற்றுக் கொண்டு 26.2.2021 நாளிட்ட மாமன்ற தீர்மான எண்.344-ன்படி அவருக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2021-2024 வரையில் மூன்று ஆண்டுகள் திரு. பி.ஜே.பாபு அவர்களுக்கு ஆண்டு குத்தகை தொகையாக ரூ.2,82,900/-க்கு மாமன்ற தீர்மானத்தின்படி ஒப்படைப்பு செய்ய குத்தகைத் தொகை மற்றும் பிற கட்டணங்களையும் சேர்த்து செலுத்தவும் அறிவிப்பு 8.7.2021-ல் வழங்கப்பட்டது. மேலும், மாநகராட்சி பொது ஏல நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதற்கு இணங்க ரூ.100/- மதிப்புள்ள முத்திரை தாளில் உரிம ஒப்பந்த பத்திரமும் எழுதி மாநகராட்சியில் சமர்ப்பிக்குமாறு 30.09.2021-ம் தேதியன்று, திரு. பி.ஜே.பாபு அவர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

திரு. பி.ஜே.பாபு அவர்களின் 17.11.2021-ம் தேதிய கடிதத்தில் தற்சமயம் COVID-19 காலமாக இருப்பதால் குத்தகை தொகையை செலுத்துவதற்கு சிரமமாக உள்ளதால் நான்கு தவணையாக தொகையை செலுத்த அனுமதிக்குமாறு கோரியிருந்தார். இக்கடிதத்தில் உரிம இனத்தை திருப்பி ஒப்படைப்பதாக அவர் தெரிவிக்கவில்லை மற்றும் மேற்படி தொகையை செலுத்தக் கோரி இருமுறை அறிவிப்பு சார்பு செய்தும் தொகையை அவர் செலுத்தவில்லை. மேலும், அவர் குறிப்பிட்ட காலம் (கடித நாள் 17.11.2021) கொரோனா தொற்று காலமும் இல்லை. வணிக நிறுவனங்கள், அலுவலகங்கள் அனைத்தும் இயங்கிக் கொண்டிருந்தன.

மேலும், ஆணையாளர் அவர்களின் 17.11.2021 நாளிட்ட உத்திரவின்படி நாளது வரை எவ்வித தொகையும் பி.ஜே.பாபு அவர்களால் செலுத்தப்படாத காரணத்தால் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி திரு. பி. ஜே. பாபு அவர்களின் வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையை பறிமுதல் செய்ய 17.12.2021-ம் தேதியன்று உத்திரவிடப்பட்டது. மேற்படி குத்தகை இனத்தினை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு 23.03.2022-ஆம் தேதியன்று பொது மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளியில் சேர்க்கப்பட்டு ஏலம் விடப்பட்டது என்று உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், திரு. பி.ஜே.பாபு, துடியலூர் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்தை குத்தகைக்கு எடுத்துவிட்டு அதை நடத்தாமலும் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகையை உரிய காலத்தில் செலுத்தாமலும் காலம் கடத்தியதால், மாநகராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு அவரின் வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையை பறிமுதல் செய்ய இம்மாநகராட்சி ஆணையாளரால் 17.12.2021-ந் தேதியன்று பொது ஏல நிபந்தனைகளின்படி உத்திரவிடப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

**3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 15.06.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

மனுதாரர் 15.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

> "கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் துடியலூரில் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தை (01.04.2017 முதல் 31.03.2020 வரை) மூன்று ஆண்டுகளுக்கு எனக்கு மாநகராட்சியால் குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. குத்தகைக் காலம் முடிவதற்கு முன்னரே அதாவது 21.3.2020 முதல் கோவிட் பெருந்தொற்று காரணமாக குத்தகை வேண்டாம் என தெரிவித்து, மேற்கண்ட மூன்று ஆண்டு கால குத்தகைக்கான வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையான ரூ.1,54,922/-ஐ எனக்கு திருப்பித் தருமாறு நேரிலும், மனு அளித்தும் கேட்டுக்கொண்டேன். ஆனால், இதுவரை மேற்கண்ட தொகையை எனக்கு மாநகராட்சியால் திருப்பித் தரப்படவில்லை. மாறாக 23.10.2020 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியின்படி சுமார் ஒரு வருட காலம் தாழ்த்தி, அதாவது 8.7.2021 அன்று திடீரென 2021-24 ஆண்டுகளுக்கான குத்தகைத் தொகையை 7 தினங்களுக்குள் என்னை பணம் செலுத்துமாறு

தெரிவித்திருந்தனர். தற்போது மேற்கண்ட வாகன நிறுத்த குத்தகையை எடுக்க எனக்கு விருப்பமில்லை என தெரிவித்து, மேற்கண்ட வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையான ரூ.1,54,922/-ஐ எனக்கு திருப்பித் தருமாறு கேட்டும், இன்னும் மாநகராட்சியிலிருந்து பதில் பெறப்படவில்லை. எனவே, மேற்கண்ட தொகையை எனக்கு மாநகராட்சியால் திருப்பி அளிக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக அளிக்கப்பட்ட மனு மற்றும் கடிதங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**15.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையர் (வடக்கு மண்டலம்) மற்றும் சிறப்பு வருவாய் ஆய்வாளர் ஆகியோர் ஆஜராகி கீழ்க்கண்ட தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

"கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட துடியலூர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை இருசக்கர வாகனம் நிறுத்தும் இடமாக 1.4.2017 முதல் 31.3.2020 வரை பயன்படுத்திக்கொள்ள மனுதாரர் திரு. P.J. பாபு அளித்த உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு, மாமன்றத் தீர்மானத்தின்படி திரு. பி.ஜே. பாபு என்பவருக்கு உரிமம் வழங்கப்பட்டது. மேற்கண்ட குத்தகைக் காலம் 31.3.2020ல் முடிவடைந்த நிலையில், கொரோனா பெருந்தொற்று, சட்டமன்றத் தேர்தல் நடத்தை விதிமுறைகள் போன்ற காரணங்களால் கோவை மாநகராட்சியில் அப்போது பொறுப்பில் இருந்த உதவி ஆணையர் மேற்கண்ட இருசக்கர வாகன நிறுத்த இடத்திற்கு உடனேயே குத்தகைக்கான ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை.

கடந்த ஆண்டு ஜுன் மாதம் கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையராக R. மோகனசுந்தரி ஆகிய நான் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர், மேற்கண்ட இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கான கட்டணம் வசூலிக்கும் உரிமம் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்து வழங்கிட 23.10.2020 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்கான ஆணை, மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி மனுதாரருக்கு 8.7.2021 மற்றும் 30.9.2021 ஆகிய நாட்களில் வழங்கப்பட்டது. ஆனால், மனுதாரர் 4 மாதங்களுக்குப் பின்னர் அளித்துள்ள 17.11.2021 நாளிட்ட கடிதத்தில் கோவிட் பெருந்தொற்று காரணமாக குத்தகைத் தொகையை செலுத்த சிரமமாக உள்ளதாகத் தெரிவித்து குத்தகைத் தொகையை 4 தவணையில் செலுத்திட அனுமதி கோரியிருந்தார். உரிய காலத்திற்குள் குத்தகைதாரர் குத்தகைத் தொகையை செலுத்தாததால் அவர் 2017-2020-ஆம் ஆண்டுகளில் குத்தகை எடுக்கும்போது அவரால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையை பறிமுதல் செய்ய உத்தரவிடப்பட்டு, மேற்கண்ட இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கு கடந்த 23.3.2022 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஏலம் விடப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையர் கடிதம் நாள்:10.6.2022ல் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்துள்ளனர்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன :

மனுதாரர் திரு. பி.ஜே. பாபு, “கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் துடியலூரில் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தை (01.04.2017 முதல் 31.03.2020 வரை) மூன்று ஆண்டுகளுக்கு தனக்கு மாநகராட்சியால் குத்தகைக்கு கொடுக்கப்பட்டது என்றும், கோவிட் பெருந்தொற்று காரணமாக 21.3.2020 அன்று அறிவிக்கப்பட்ட ஊரடங்கு காரணமாக குத்தகைக் காலம் முடிவதற்கு முன்னரே அதாவது 21.3.2020 முதல் குத்தகை உரிமம் தமக்கு வேண்டாம் என தெரிவித்து, மேற்கண்ட மூன்று ஆண்டு கால குத்தகைக்கான வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையான ரூ.1,54,922/-ஐ தனக்கு திருப்பித் தருமாறு 15.6.2020 அன்று நேரிலும், மனு அளித்தும் கேட்டுக்கொண்டதாகவும், ஆனால், இதுநாள்வரை அந்த தொகையை தனக்கு மாநகராட்சியால் திருப்பித் தரப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

2020-21 ஆண்டிற்காக 23.10.2020 அன்று நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள திரு. பாபு என்பவர் முந்தைய ஆண்டு செலுத்திய ஏல/வைப்புத்தொகையின் நகலினை இணைத்து, சென்ற ஆண்டு எடுத்த ஏலத் தொகையைவிட ரூ.55,075/- குறைவாக குறிப்பிட்டு 23.10.2020 நாளிட்ட தேதியில் ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார் என்பது உதவி ஆணையரின் அறிக்கை (ம) வாக்குமூலத்தின் மூலம் தெளிவாகிறது.

அடுத்து 29.10.2020ல் நடைபெற்ற ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளாததால் ஏற்கனவே 23.10.2020-ல் இவர் குறிப்பிட்ட ஒப்பந்தபுள்ளியை ஏற்று 26.2.2021-ல் மாமன்ற தீர்மானத்தின்படி திரு. பாபுவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது.

திரு. பாபு அவர்கள் 17.11.2021 நாளிட்ட கடிதத்தில் தாம் செலுத்த வேண்டிய தொகையை 4 தவணையாக செலுத்த அனுமதி கோரியுள்ளதும் தெரியவருகிறது.

திரு. பாபு அவர்கள் செலுத்த வேண்டிய தொகையை இறுதிவரை செலுத்தாததால் அவரின் வைப்புத் தொகை (ம) கேட்பு தொகையை பறிமுதல் செய்ய 17.12.2021ல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார். மேலும், திரு. பாபு தொகையை செலுத்தாததால் மாநகராட்சிக்கு ஏற்பட உள்ள இழப்பை தவிர்க்கும் பொருட்டே 23.3.2022ல் பொது ஏலம் விடப்பட்டுள்ளது என்றும் ஆணையரின் அறிக்கையின் மூலம் தெரியவருகிறது.

மனுதாரர் 23.10.2020 நாளிட்ட கடிதம் மூலம் ஏலத்தில் பங்கு கொண்டு ஏலம் மனுதாரருக்கு உறுதி செய்யப்பட்ட பிறகு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாமல் காலம் தாழ்த்தியதால் மாநகராட்சி தமது வருவாய் இழப்பை தவிர்ப்பதற்காக வைப்புத் தொகை (ம) காப்புத் தொகையை பறிமுதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதில் மனுதாரரின் செயல்பாடும் ஏற்கக் கூடியதாக இல்லை.

இருப்பினும், 23.10.2020 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி சுமார் ஒருவருட காலம் தாழ்த்தி, அதாவது 8.7.2021 அன்று திடீரென 2021-24-ஆம் ஆண்டுகளுக்கான குத்தகைத் தொகையை 7 தினங்களுக்குள் தன்னை செலுத்துமாறு ஆணையாளர் தெரிவித்திருந்ததாகவும், தற்போது மேற்கண்ட வாகன நிறுத்த குத்தகையை எடுக்க தனக்கு விருப்பமில்லை என தெரிவித்து, மேற்கண்ட வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையான ரூ.1,54,922/-ஐ திருப்பித் தருமாறு கேட்டும், இன்னும் மாநகராட்சியிலிருந்து பதில் பெறப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் உதவி ஆணையர் மற்றும் சிறப்பு வருவாய் ஆய்வாளர் ஆகியோர் கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட துடியலூர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தின் குத்தகைக் காலம் 31.3.2020ல் முடிவடைந்துவிட்டது. மேற்குறிப்பிட்ட இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கான கட்டணம் வசூலிக்கும் உரிமம் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு (2021–24) நீட்டித்து வழங்கிட 23.10.2020 மற்றும் 29.12.2020 ஆகிய நாட்களில் பொது ஏலம் நடத்தப்பட்டது. மாமன்றத்தில் தீர்மானம் 26.2.2021 அன்றுதான் நிறைவேற்றப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்று மற்றும் சட்டமன்றத் தேர்தல் நடத்தை விதிமுறைகள் போன்ற காரணங்களால் கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்தில் அப்போது பொறுப்பில் இருந்த உதவி ஆணையர் மேற்கண்ட இருசக்கர வாகன நிறுத்த இடத்திற்கு உடனேயே குத்தகைக்கான ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை என்றும், கடந்த ஆண்டு ஜூன் மாதம் கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையராக வேறொரு அலுவலர் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர், மனுதாரருக்கு 8.7.2021 அன்று அறிவிப்பும் மற்றும் 30.9.2021 அன்று இறுதி அறிவிப்பும் வழங்கப்பட்டது என்றும், ஆனால், மனுதாரர் 4 மாதங்களுக்குப் பின்னர் அளித்துள்ள 17.11.2021 நாளிட்ட கடிதத்தில் கோவிட் பெருந்தொற்று காரணமாக குத்தகைத் தொகையை செலுத்த சிரமமாக உள்ளதாகத் தெரிவித்து குத்தகைத் தொகையை 4 தவணையில் செலுத்திட அனுமதி கோரியிருந்தார். உரிய காலத்திற்குள் குத்தகைதாரர் குத்தகைத் தொகையை செலுத்தாததால் 2017-2020 ஆண்டுகளில் குத்தகை எடுக்கும்போது மனுதாரரால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையை பறிமுதல் செய்ய 18.12.2021-ல் உத்தரவிடப்பட்டு, மேற்கண்ட இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கு கடந்த 23.3.2022 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஏலம் விடப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

<u>விரிவான ஆய்வுக்குப்பின் இம்முறைமன்றம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது :</u>

பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி குறித்தான தொடர் நடவடிக்கைகள் நிர்வாக ரீதியில் ஒவ்வொரு நிகழ்விலும் காலம் தாழ்த்தியே எடுக்கப்பட்டு உள்ளது என்பதை தெள்ளத்தெளிவாக அறிய முடிகிறது. அதாவது பொது ஏலம் நடத்தப்பட்டு, ஏலம் இறுதி செய்யப்பட்ட பிறகு மன்றத் தீர்மானமானது இரண்டு மாத காலம் கழித்தே நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் குத்தகைத் தொகை செலுத்த கோரிய அறிவிப்பு 4 மாத காலத்திற்கு பிறகே குத்தகைதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. மறு ஏலமானது 8 மாத காலத்திற்கு பிறகே நடத்தப்பட்டுள்ளதும் அறிக்கையிலிருந்தும், விசாரணையின் மூலமும் தெள்ளத் தெளிவாக தெரிகிறது. மேலும் மனுதாரர் தரப்பிலும் கொரோனா பெருந்தொற்று காரணமாக குத்தகை ஒப்படைக்கப்பட்டதிலிருந்து, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான மறு ஏலம் நடைபெற்று, குத்தகை உறுதி செய்யப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பும், அதற்கு பிறகு அறிவிப்பு வழங்கிய

பிறகும் இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கு கட்டணம் எதுவும் வசூலிக்கப்படவில்லை எனவும் விசாரணையில் தெரிய வருகிறது. எவ்வித வருவாயும் மனுதாரரால் ஈட்டாத பட்சத்தில், உரிய காலத்தில் அறிவிப்பு ஏதும் மாநகராட்சியால் வழங்கப்படாத நிலையில் மனுதாரரால் குத்தகை தொகையை எவ்வாறு செலுத்த இயலும்? உரிய காலத்திற்குள் குத்தகைதாருக்கு அறிவிப்பு வழங்காமல் வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையை மாநகராட்சி பறிமுதல் செய்வது என்பது மிகவும் கண்டனத்திற்குரிய செயலாகவே இம்முறைமன்றம் கருதுகிறது.

இதில் மனுதாரரும் அறிவிப்பு வழங்கிய 4 மாதங்களுக்குப் பின்னரே தவணை முறையில் குத்தகை தொகையை செலுத்த கால அவகாசம் கோரியுள்ளார். இருப்பினும் மாநகராட்சி நிர்வாகத்தால் அறிவிப்பு வழங்கிய ஏழு தினங்களுக்குள் குத்தகைதாரர் குத்தகை தொகை செலுத்தாத பட்சத்தில், "துறை ரீதியான" (Department Collection) வசூல் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கலாம் அல்லது மறு ஏலம் நடத்த உடனடி நடவடிக்கை மேற்கொண்டு இருக்கலாம். இந்த நிகழ்வில் இருந்தே மாநகராட்சி அதிகாரிகளின் அலட்சியப் போக்கை கண்கூடாக காண முடிகிறது.

மேலும், 2020-21-ஆம் ஆண்டிற்கு நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் திரு. பி.ஜே.பாபு ஆண்டு குத்தகையாக ரூ.2,82,900/-க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்தார். மறு ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாததால் துறை ரீதியான வசூல் (Department Collection) போன்ற நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளாமலும் அல்லது மறு ஏல தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமலும், உதவி ஆணையாளர் தன்னிச்சையாக ஏலம் மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகளை முறையாக பின்பற்றாமல் வருவாய் இழப்பை ஏற்படுத்தியது மிகவும் கண்டனத்திற்குரியது. ஒவ்வொரு நிகழ்விலும் காலம் தாழ்த்தியே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெள்ளத்தெளிவாக அறிய முடிகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல அலுவலர்களின் கடும் மெத்தனப் போக்கு மற்றும் மாநகராட்சிக்கு வருவாய் ஈட்ட வேண்டும் என்ற அக்கறையின்மையாலும் 2020-21 மற்றும் 2021-22 ஆகிய நிதியாண்டுகள் முழுவதுமாக துடியலூர் இருசக்கர வாகன நிறுத்துமிடம் குத்தகைக்கு விடப்படாமல் உள்ளதை அறிய முடிகிறது. இதனால், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

தெரு விளக்குகள், கழிவு நீர் வெளியேற்றுதல், சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் போன்ற பல்வேறு மக்கள் கோரிக்கைகள் மீது, நிதிப்பற்றாக்குறை காரணமாக உள்ளாட்சி நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்க இயலாமல் உள்ளதைத் காண முடிகிறது. இவ்வாறான நிலையில், மாநகராட்சிக்கு வரவேண்டிய வருவாயை ஈட்ட, மாநகராட்சி அலுவலர்கள் மிகுந்த கவனத்துடனும், மிகுந்த அக்கறையுடனும் செயல்பட வேண்டியது மிக மிக அவசியமாகும்.

பல்வேறு காரணங்கள் கூறினாலும், ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. அதனால் இரண்டு நிதியாண்டுகளில் மாநகராட்சி கரூவூலத்திற்கு வரவேண்டிய வருவாய் ஈட்டப்படாமல் உள்ளது. குறித்த காலங்களில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாத கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல அலுவலர்களின் **கடும் மெத்தனப் போக்கே காரணமாகும் என்பதை இம்முறைமன்றம் சுட்டிக் காட்டுகிறது.**

எனவே, இந்த வருவாய் இழப்புக்குக் காரணமான கோயம்புத்தூர் மாநகராட்சியின் வடக்கு மண்டலத்தின் சம்பந்தப்பட்ட அனைத்து மாநகராட்சி அலுவலர்களையும் இதுபோன்று வரும் காலங்களில் நடக்காமல் இருக்க **கடும் எச்சரிக்கை விடுக்கவேண்டும்** என்று கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரைத்து ஆணையிடுகிறது.

மேலும், சம்பந்தப்பட்ட கோப்புகளை ஆய்வு செய்து, **மேற்குறிப்பிட்டுள்ள வருவாய்** இழப்புகளுக்கு காரணமான ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளில் **குறிப்பிட்டுள்ள** காலவரையறைகளைப் பின்பற்றி உரிய காலங்களில் நடவடிக்கை மேற்கொள்ளாத, நிதி இழப்பிற்கு காரணமான மற்றும் கவனக் குறைவாக செயல்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்தில் 2020–21 மற்றும் 2021–22-ஆம் நிதியாண்டுகளில் பணியாற்றிய சம்பந்தப்பட்ட அனைத்து மாநகராட்சி அலுவலர்களையும் பொறுப்பாக்கி, அவர்கள் மீது **துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு** இம்முறைமன்றம் பரிந்துரைத்து ஆணையிடுகிறது.

மனுதாரர் திரு. P.J. பாபு, 15.6.2020 அன்றே தனக்கு குத்தகை வேண்டாம் என தெரிவித்து தனக்குச் சேர வேண்டிய தொகைகள் திருப்பி அளிக்க கேட்டுக்கொண்டுள்ளார். ஆனால் கோயம்புத்தூர் மாநகராட்சி அவருக்கு தொகைகளை திருப்பி அளிக்கவில்லை. எனவே, மனுதாரர் திரு. P.J. பாபுவிற்கு, அவர் மாநகராட்சிக்கு செலுத்திய தொகையில் **ஒரு பகுதியை மட்டும் பிடித்தம் செய்துகொண்டு, மீதமுள்ள தொகையை அவருக்கு திருப்பி கொடுக்க இம்முறைமன்றம், கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டல, உதவி ஆணையருக்கு உத்தரவிடுகிறது.**

மேலும், அனைத்து மாநகராட்சி அலுவலர்களுக்கும், வருவாய் ஈட்ட வேண்டிய இனங்களில் குறித்த காலத்திற்கு முன்னரே முறையாகத் திட்டமிட்டு, வருவாய் ஈட்ட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என சுற்றறிக்கை அனுப்ப வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கத் **தவறும் நேர்வுகளில் துறைரீதியான கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்க வேண்டும்** என்று கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The quantum of amount to be forfeited from the petitioner's security deposit may be determined by the Commissioner using a standard principle coupled with discretion vested in the office of the Commissioner. This Forum abstains from pointing out any specific amount in this issue.

Secondly, the Forum notices inordinate and avoidable delay on the part of the field officials as well as the Asst. Commissioner in taking every action at their whims and fancies absolving them of all omissions, dereliction and infringements but grabbing at the throat of the petitioner to cover up their default and delinquency. Severe disciplinary action against these delinquents who committed wanton delays at every stage of the matter is ordered by this Forum. The Director of Municipal Administration is

instructed to pursue the execution of the instructions of this Forum by the Coimbatore Corporation.

2022-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. பி.ஜே. பாபு,
   146, 4வது வீதி,
   காந்திபுரம், கோயம்புத்தூர் – 641 012.
2. ஆணையாளர்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி.
   கோயம்புத்தூர். (பெயரிட்ட உறையில்)
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
4. உதவி ஆணையாளர்,
   வடக்கு மண்டலம்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி.
5. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.